Tchang Ju Chi: Tireless Camel

“为此，骆驼出来了。虽则，脚步恁般迂缓，样子笨滞；但是它，纵使前途有沙、尘、有风、雷雨，与一切困苦，还是负着重大的使命，一步一步地前进，永远没有倦意。”

“இதற்காக, ஒட்டகம் வெளிப்படுகிறது. அதன் நடை மெதுவாகவும், அதன் தோற்றம் அருவருப்பாகவும் இருந்தாலும், அது தொடர்ந்து முன்னேறுகிறது. மணல், தூசி, காற்று, இடி, மழை மற்றும் முன்னால் உள்ள அனைத்து இடர்களையும் மீறி, அஃது ஒரு பெரிய பணியிலக்கைச் சுமந்து செல்கிறது, படிப்படியாக, எப்போதும் சோர்வடையாமல் முன்னேறிச் செல்கிறது.”

இட்சாங் ஜு சி (Tchang Ju Chi) (பிறப்பு 1904, சீனா; இறப்பு. 1942, சிங்கப்பூர்) ஒரு முக்கியமான, முன்னோடி ஓவியராக இருந்தார், 1927 முதல் 1942 வரை சிங்கப்பூரில் தீவிரமாகச் செயல்பட்டார், இது கொந்தளிப்பான சமூக-அரசியல் எழுச்சிகளின் காலக்கட்டமாகும். ஷாங்காய் நுண்கலைக் கல்லூரியில் மேற்கத்திய ஓவியத்தில் பயிற்சி பெற்று, பின்னர் பிரான்ஸில் நேரத்தைச் செலவிட்டார், ஒரு நண்பர் அவரைச் சிங்கப்பூரில் தங்கும்படி வற்புறுத்தினார், அஃது இறுதியில் சிங்கப்பூரை அவரது இருப்பிடமாக மாற்றவைத்து, அதன் புதிய ஓவியச் சூழலை மாற்றியமைத்தது. இட்சாங் (Tchang) ஒரு காலத்தில் ஓவியர்களை ஒட்டகங்களுடன் ஒப்பிட்டார்: மெதுவாக ஆனால் உறுதியான அடிகளை எடுத்து வைத்து, ஒரு குறிக்கோளால் இயக்கப்பட்டு, சளைக்காமல் தடுமாறித் தடுமாறி நடப்பது அதன் இயல்பு. இந்த உவமை புதிய வழிகளை முன்னோக்கி அமைக்கும் அவரது உறுதிப்பாட்டையும் தைரியத்தையும் பறைசாற்றுகிறது. சிங்கப்பூரில் தொடர்ந்து கண்காட்சிகள் நடத்தப்பட்டு கலைச் சொற்பொழிவு வேரூன்றத் தொடங்கிய ஒரு மலர்ச்சியடைந்த காட்சியியல் கலைச் (visual art) சூழலில் முன்னணியில் அவர் நின்றார்.

உள்ளூர்த் தலைப்புப்பொருள்களைத் தனது படைப்புகளில் ஒருங்கிணைத்த தொடக்கக்கால ஓவியர்களில் ஒருவரான இட்சாங் (Tchang), "நன்யாங் கலை"யின் தோற்றம் மற்றும் வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகித்தார். அவரது படைப்புகள் அவரது சகாக்கள் பலரைப் பாதித்தன, மேலும் இக்சூ பீஹாங் (Xu Beihong), சென் சோங் இஸ்வீ (Chen Chong Swee) மற்றும் லியு காங் (Liu Kang) உள்ளிட்ட அவரது புகழ்பெற்ற சமகாலத்தவர்களால் திறனாய்வு செய்து பாராட்டப்பட்டன. இருப்பினும், அவரது பங்களிப்புகள் இருந்தபோதிலும், அவரது பெயரும் படைப்புகளும் பொது நினைவில் முழுமையாகப் பதியவில்லை. 50 ஆண்டுகளுக்கும் மேலான காலக்கட்டத்தில் முதன்முறையாக, இக்கண்காட்சி 15க்கும் மேற்பட்ட கலைப்படைப்புகள், மறுஉருவாக்கம் செய்யப்பட்ட கருத்துப்படங்கள் மற்றும் காப்பகப் பொருள்களின் அரிய தொகுப்பை ஒன்றிணைத்து, ஓவியரின் பங்களிப்புகள் மற்றும் மரபுகளை வெளிப்படுத்துகிறது.

தேசியத் திரட்டுக்கு 'இட்சாங் ஜூ சி' (Tchang Ju Chi) மற்றும் 'சுவாங் யூ-சோ'வின் (Chuang U-Chow) கலைப்படைப்புகளைப் பரிசளித்ததற்காக, இட்சாங்கின் மகள் சாங் சி ஃபன் (ஷெவின்) (Chang Si Fun) (Shewin) மற்றும் 'சுவாங் யூ-சோ'வின் மகள் சோங் சீ பெங் (Chong Chee Beng) ஆகியோரிடம் சிங்கப்பூர் தேசிய கலைக்கூடம் அன்புடன் நன்றி தெரிவிக்கிறது.

மெதுவாக ஆனால் உறுதியாக யேஹ் ஹுய் (*Yeh Hui*), லாட் பாவ் (*Lat Pau*), டிசம்பர் 11, 1930
தன்னுருவப்படம் 1937 கித்தானில் எண்ணெய் ஓவியரின் மகள் சாங் சி ஃபன் (ஷெவின்) [Chang Si Fun (Shewin)] அவர்களின் பரிசு சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2022-00940 பெரே (Beret) தொப்பியும் தோள்பட்டை நாடாவும் அணிந்துகொண்டு, இட்செங் (Tchang) பிரெஞ்சுப் பாணியில் உள்ள ஓர் ஓவியராக தன்னைக் காட்டுகிறார். ஷாங்காய் நுண்கலை கல்லூரியில் பட்டம் பெற்ற பிறகு, லியு ஹைசு (Liu Haisu) போன்ற ஆசிரியர்களிடமிருந்து அடிப்படை ஓவியப் பயிற்சியைப் பெற்ற இட்சாங், மார்சேய் (Marseille) நுண்கலை பள்ளியில் சிறிது காலம் படித்தார். இருப்பினும், நிதிச் சிக்கல்கள் அவரைச் சீனாவுக்குத் திரும்பக் கட்டாயப்படுத்தியது. பின்னர் ஒரு நண்பர் சிங்கப்பூரிலுள்ள வாய்ப்புகளைப் பரிசீலிக்குமாறு அவரை வற்புறுத்தினார், இறுதியில் அவர் 1927 இல் சிங்கப்பூரில் குடியேறினார். வடிவமைப்பு மற்றும் விளம்பரத் துறையில் வெற்றிகரமான வாழ்க்கைக்குப் பிறகு, 1934 ஆம் ஆண்டு ஐரோப்பாவிற்குத் திரும்பிய இட்சாங் (Tchang), ஓவியக் காட்சியை ஆய்வு செய்யவும், பாரிஸில் உள்ள லூவ்ரே (Louvre) போன்ற இடத்தடையாளமாய் (landmark) விளங்கும் சின்னங்களைப் பார்வையிடவும் தொடங்கினார்.
莲山双林禅寺 (லியான் ஷான் ஷுவாங் லின்னின்மடாலயம்) 1927 கித்தானில் எண்ணெய் டாக்டர் கிளேர் ஆங்கின் (Dr. Claire Ang) திரட்டு இப்படைப்பு, லியான் ஷான் ஷுவாங் லின் (Lian Shan Shuang Lin) மடாலயத்தில் உள்ள ஸ்கந்த புத்தர் பலிபீடத்தில், தரையில் விழும் மென்னொளியால் ஒளிரும்.அமைதியான மூலையைச் சித்தரிக்கிறது, ஸ்கந்த புத்தரின் முகம் தெய்வத்தின் மீதுள்ள பயபக்தியின் காரணமாக மறைக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூருக்கு வந்தவுடன் இட்சாங் (Tchang) உருவாக்கிய முதல் படைப்புகளில் இதுவும் ஒன்றாக இருக்கலாம். உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சீன சமூகத்தினரின் பங்களிப்புகள் மூலம் 1909 ஆம் ஆண்டு தோ பாயோவில் (Toa Payoh) கட்டி முடிக்கப்பட்ட இந்த மடாலயம், சிங்கப்பூரில் பௌத்த மதத்தின் குறிப்பிடத்தக்க மையமாக உள்ளது. இட்சாங்கின் சித்தரிப்பு உள்ளூர்ப் பண்பாட்டுடனான அவரது தொடர்பையும், சிங்கப்பூரின் வாழ்க்கையையும் இயற்கை நிலக்காட்சிகளையும் படம்பிடிக்க வேண்டும் என்ற அவரது விருப்பத்தையும் பிரதிபலிக்கிறது.

கோவில் சுமார் 1930கள் கித்தானில் எண்ணெய் டாக்டர் கிளேர் ஆங்கின் (Dr. Claire Ang) திரட்டு
இயோ மாங் தாங் (Yeo Mang Thong) (பிறப்பு 1947, சீனா) 流动迁移在地经历：新加坡视觉艺术现象（1886–1945） இடம்பெயர்வு, பரிமாற்றம் மற்றும் உள்ளூர்மயமாதல்: சிங்கப்பூரில் காட்சியியல் கலை (1886–1945) முதலில் 2017-இல் சீன மொழியில் வெளியிடப்பட்டது; ஆங்கிலப் பதிப்பு 2019-இல் வெளியிடப்பட்டது. 1980களில், இயோ மாங் தாங் (Yeo Mang Thong) சிங்கப்பூரின் போருக்கு முந்தைய வரலாறு குறித்த தனது ஆராய்ச்சியைத் தொடங்கினார், இச்செயல்பாட்டில், இட்சாங் ஜு சியின் (Tchang Ju Chi) ஓவியங்கள் உட்பட பல ஓவியர்களின் கவனிக்கப்படாத மரபுகளை வெளிப்படுத்தினார். புத்தக அட்டையில் இட்சாங்கின் 'கசாங் புத்தே' (Kacang Puteh) மனிதர் என்ற வறுகடலை விற்பனையாளர் ஓவியம் இடம்பெற்றுள்ளது. இஃது ஒரு தெரு விற்பனையாளர் நொறுக்குதீனிகளை விற்கும் ஒரு துடிப்பான ஓவியம் ஆகும். புத்தகம் வெளியிடப்பட்ட நேரத்தில், அவ்வோவியம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்தது, அதன் உரிந்து விழும் வண்ணப்பூச்சு, அவ்வோவியரின் மரபு பொதுமக்களின் நினைவிலிருந்து எவ்வாறு மறைந்துவிட்டது என்பதைப் பிரதிபலிக்கிறது. 'கசாங் புத்தே' (Kacang Puteh) மனிதர் என்ற வறுகடலை விற்பனையாளர் ஓவியம் தற்போது தேசியத் திரட்டின் ஒரு பகுதியாக உள்ளது, மேலும் 2026 ஆம் ஆண்டு நடைபெறும் கண்காட்சியில் காட்சிப்படுத்துவதற்கான தயாரிப்பில் தற்போது மீட்டுப்பாதுகாக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இங்கு வழங்கப்பட்ட பல பணிகளைப் போலவே, பாதுகாப்புச் சிகிச்சைகளுள் ஓவிய அடுக்குகளை சுத்தம் செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்; வண்ணப்பூச்சு இழப்புகளை நிரப்புதல் மற்றும் மறுசீரமைப்பு செய்தல் ஆகியவை அடங்கும்.

“而况中原板蕩。夷狄交侵略。故國荒涼。野灶無菸。此正我辈以艺术警醒群伦时也。爰集同调。共组画社。”

“சீனா கொந்தளிப்பில் உள்ளது, வெளிநாட்டுப் படையெடுப்பாளர்களால் சூழப்பட்டுள்ளது, தரிசு வயல்கள் மற்றும் சமைக்காத குளிர்ந்த அடுப்புகளுடன் தாய்நாடு அழிவில் உள்ளது. கலை மூலம் மக்களை விழித்தெழச் செய்ய வேண்டிய தருணம் இஃது. இவ்வாறு, ஒரு கலைச் சங்கத்தை உருவாக்க நான் ஒத்த எண்ணம் கொண்டவர்களை ஒன்று திரட்டினேன்.”

தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்துதல்

சீன ஓவியர்கள் சங்கத்தின் (SOCA) நிறுவனத் தலைவராக (1936 இல் நிறுவப்பட்டது) 31 வயதில் நியமிக்கப்பட்ட இட்சாங் ஜு சி (Tchang Ju Chi), சிங்கப்பூரின் ஓவியத் துறையில் ஒரு மரியாதைக்குரிய சக்தியாக இருந்தார். வட்டாரத்திலும் அதற்கு அப்பாலும் ஓவியத்தை ஊக்குவிப்பதற்கும் ஓவியப் பரிமாற்றங்களை வளர்ப்பதற்கும் அமைக்கப்பட்ட SOCA, வெளியிலிருந்து ஓவியர்களை வரவேற்று விருந்தோம்பல் செய்தது, குழு ஓவியம் மற்றும் ஓவிய அமர்வுகளை ஏற்பாடு செய்தது மற்றும் ஆண்டுக் கண்காட்சிகளை நடத்தியது. பண்பாட்டு மற்றும் ஓவிய நடவடிக்கைகளின் துடிப்பான சோலையாக கலைச் சூழல் மலர்ந்தது. 1936 முதல் 1941 வரை, அதன் ஆண்டுக் கண்காட்சிகள் 60க்கும் மேற்பட்ட ஓவியர்களை ஈர்த்து 900க்கும் மேற்பட்ட படைப்புகளை வழங்கின. இட்சாங் அனைவர்க்கும் முன்னெடுத்துக்காட்டாகத் தலைமை தாங்கி 70க்கும் மேற்பட்ட படைப்புகளைக் காட்சிப்படுத்தினார்.

181 டேங்க் சாலையில் அமைந்துள்ள இட்சாங்கின் மூன்று மாடி கடைவீடு, 1939 வரை SOCA-வின் தலைமையகமாக இருந்தது. முதல் மாடியில் ‘தி யுனைடெட் பெயிண்டர்ஸ்’ (The United Painters) என்ற விளம்பர மற்றும் வடிவமைப்புப் படைப்பகம் இருந்தது, அதனை அவர், SOCA இன் நிறுவன உறுப்பினராக இருந்த தனது மைத்துனர் சுவாங் யு-சோவுடன் (Chuang U-Chow) இணைந்து நடத்தினார், இரண்டாவது மாடியில், ஓவியர்கள் இட்சாங் சமைத்த உணவுக்காகக் கூடினர், ஓவியம் மற்றும் உணவில் அவர்கள் பின்னிக் பிணைந்திருந்தனர். மூன்றாவது மாடி ஓவிய அமர்வுகளுக்கான ஒரு படைப்பகமாகும் (studio), அங்கு ஓவியர்கள் ஜப்பானியப் போர் எதிர்ப்புப் பரப்புரைப் பதாகைகள் மற்றும் ஓவியங்கள் உள்ளிட்ட படைப்புகளை உருவாக்கினர். 1939 இல் இக்சூ பெய்ஹாங்கின் (Xu Beihong) ஓவியக் கண்காட்சி போன்ற, சீனாவில் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்காக நிதி திரட்டும் கண்காட்சிகள் ஏற்பாடு செய்யப்பட்ட இடமும் இதுதான்.

தன்னுருவப்படம்

1939
கித்தானில் எண்ணெய்

ஓவியரின் மகள் சாங் சி ஃபன் (ஷெவின்) [Chang Si Fun (Shewin)] அளித்த பரிசு

சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு
2022-00938

画家的夫人像
(ஓவியரின் மனைவியின் உருவப்படம்)

1939
கித்தானில் எண்ணெய்

சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு
2021-00083

இட்சாங்கின் மனைவி சென் மெங்யுவின் (Chen Mengyu) இவ்வுருவப்படத்தின் இடது பக்கத்தில் ஒரு கித்தானை நீங்கள் கவனித்தீர்களா? சென் அடிக்கடி தனது கணவரின் ஓவியங்களுக்காக தங்கள் வீட்டுப் படைப்பகத்தில் அமருநராக அமர்ந்திருந்தார், தனிப்பட்ட உருவப்படங்கள் முதல் ஜப்பானியப் போர் எதிர்ப்புப் பரப்புரை ஓவியங்கள் வரை பல படைப்புகளில் தோன்றினார், அவற்றில் பல பின்னர் தொலைந்து போயின. சென் ஒரு நவீன பெண்மணி, சிங்கப்பூருக்குச் செல்லும் கப்பலில், வீட்டில் ஏற்பாடு செய்யப்பட்ட திருமணத்திலிருந்து தப்பிச் செல்லும்போது அவர் இட்சாங்கைச் சந்தித்தார். இருவரும் விரைவில் திருமணம் செய்து கொண்டனர். தன் தையல் திறமையால் பெயர் பெற்ற சென், இட்சாங் தயாரித்த திரைப்பட விளம்பரங்களுக்காக பெரிய பதாகைகள் மற்றும் துணிப் பின்னணிகளை அடிக்கடி வடிவமைத்தார்.

இட்சாங் ஜு சிக்கு (Tchang Ju Chi) சொந்தமானது
ஓவியரின் மனைவி சென் மெங்யுவின் (Chen Mengyu) மார்பளவுச் சிற்பம்

சுமார் 1930கள்
பாரிஸ் சாந்து

செலினா ஆங்கின் (Selina Ang) திரட்டு

ஹோ குவாங் யூவின் (Ho Kwong Yew) உருவப்படம்

சுமார் 1939–1940
கித்தானில் எண்ணெய்

'ஹோ கா கே'வின் (Ho Kah Keh) திரட்டு

இங்கு, ஹோ குவாங் யூ (Ho Kwong Yew) (1903–1942) அமைதியான, நம்பிக்கையான முகபாவனையுடன் சித்தரிக்கப்படுகிறார், வெளிர் நிற அங்கிக்காற்சட்டை (suit), கழுத்துப்பட்டையுள்ள சட்டை மற்றும் கோடிட்ட கழுத்து நாடா (tie) அணிந்துள்ளார். சிங்கப்பூரில் பதிவுசெய்துள்ள, உள்ளூரில் பிறந்த முதல் ஆசியக் கட்டடக் கலைஞர் என்ற அவரது நிலையை அவ்வுடை பிரதிபலிக்கிறது. அடிக்கடி குழாயை உடனெடுத்துச் செல்வதில் பெயர் பெற்ற ஹோ, புகழ்பெற்ற 'ஹாவ் பார் வில்லா' (Haw Par Villa) உட்பட ஏராளமான கட்டடங்களை வடிவமைத்தார். அவர்

ஓவியங்களின் புரவலராகவும், 1941 இல் சீன ஓவியர்கள் சங்கத்தின் துணைத் தலைவராகவும் பணியாற்றினார்.

லிம் ஹக் டாயின் (Lim Hak Tai) உருவப்படம்

சுமார் 1930கள்
கித்தானில் எண்ணெய்

ஃபுகுவோகா (Fukuoka) ஆசியக் கலை அரும்பொருளகத்தின் திரட்டு

சிங்கப்பூரின் தொடக்கக்கால நுண்கலைக் கழகங்களில் ஒன்றான நன்யாங் நுண்கலைக் கழகத்தின் (NAFA) நிறுவனர் லிம் ஹக் டாயின் (Lim Hak Tai) குழி விழுந்த கன்னங்களையும் நன்கு தேய்ந்துபோன முகபாவனையையும் இட்சாங் இங்கே நுட்பமாகப் படம்பிடித்துள்ளார். கழகத்தில் அயராத ஈடுபாட்டுடன் பணிபுரிந்தமைக்கு அறியப்பட்ட லிம், சிங்கப்பூரில் பல எதிர்காலத் தலைமுறை ஓவியர்களை வளர்த்தார்.

சீன-ஜப்பானியப் போர் வெடித்ததைத் தொடர்ந்து, 1937 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் குடியேறிய லிம், விரைவில் சீன ஓவியர்கள் சங்கத்தில் சேர்ந்தார். அங்கு, சங்கத்தின் அப்போதைய துணைத் தலைவரான யோங் முன் சென் (Yong Mun Sen), ஒரு நுண்கலைக் கழகத்தை நிறுவ வேண்டுமென முன்மொழிந்தார். இக்கனவு 1938 ஆம் ஆண்டு NAFA நிறுவப்பட்டதன் மூலம் உணரப்பட்டது.

சுவாங் யூ-சோ (Chuang U-Chow)
(பிறப்பு 1907, சீனா; இறப்பு. 1942, சிங்கப்பூர்)

தன்னுருவப்படம்

1939
காகிதத்தில் வெளிர் நிறமி

ஓவியரின் மகள் சோங் சீ பெங்கின் (Chong Chee Beng) பரிசு
சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு
2025-00044

தாமாகக் கற்றுக் கொண்ட ஓவியராக இருந்த போதிலும், இப்படைப்பு, நேரியல் பார்வையை உடைத்து, வலதுபுறத்தில் உள்ள வட்ட மேசை போன்ற படைப்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் தட்டையான தன்மையை வலியுறுத்துவதன் மூலம், சுவாங் யு-சோவின் (Chuang U-Chow), உணர்ச்சிப்பதிவுவாதத்துக்குப் (impressionism) பிந்தைய முழுத்தெளிவான ஈடுபாட்டை மெய்ப்பிக்கிறது. பின்னணியில் உள்ள பெண்ணின் உருவப்படம், 1939 ஆம் ஆண்டு சீன ஓவியர்கள் சங்கத்தின் (SOCA) 4 வது ஆண்டுக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட சுவாங்கின் 'மலாய்ப் பெண்கள்' படைப்பைக் குறிக்கிறது.

சுவாங், இட்சாங்கின் பெற்றோர் வழி உறவினரில் முதலாமவரை மணந்து, 181 டேங்க் சாலையில் ஒன்றாக வசித்து வந்தார். SOCA-வின் நிறுவன உறுப்பினரும் செயலாளருமான அவர், ஆங்கிலம் மற்றும் ஜெர்மன் மொழிகளில் சரளமாகப் பேசுவதன் மூலம் அரசாங்கத்துடனான சங்கத்தின் கடிதப் பரிமாற்றத்தை நிர்வகித்தார். சுவாங் போர்-எதிர்ப்பு இழப்பீட்டு முயற்சிகளிலும் தீவிரமாக இருந்தார், மேலும் அவரது அரசியல் கருத்துப்படங்களுக்காக அறியப்பட்டார், அவற்றில் பல உள்ளூர்ச் செய்தித்தாள்களில் வெளிவந்தன.

சுவாங் யூ-சோவ் (Chuang U-Chow)
(பிறப்பு 1907, சீனா; இறப்பு. 1942, சிங்கப்பூர்)
சிறுவன்

1936
காகிதத்தில் நீர்வண்ணம்

தனியாரின் திரட்டு

“椰林皓月。尽是写青佳作。暮霭朝霞。岂非大块文章。”

“ஒளிர் நிலவின் கீழே, தென்னந்தோப்புகள் ஓவியம் வரைவதற்கு சரியான தலைப்புப்பொருள்களாக நிற்கின்றன; மாலை மூடுபனியும் காலை ஒளியும் இலக்கியப் படைப்புகளுக்குச் சிறந்தவை அல்லவா? ”

உள்ளூர் வண்ணங்களை ஓவியம் வரைதல்

1927 ஆம் ஆண்டு, ஒரு புதிய இலக்கிய இயக்கம் வேரூன்றிக் கொண்டிருந்த வேளையில், இட்சாங் ஜு சி (Tchang Ju Chi) சிங்கப்பூருக்கு வந்தார். சீனாவின் அரசியல் எழுச்சியால் இடம்பெயர்ந்த இளம் சீன அறிவுஜீவிகள் சிங்கப்பூருக்கு வந்து, சீனாவின் நிலப்பரப்புகளைப் பற்றிய எழுத்துகள் மூலம் தங்கள் தாய்நாட்டிற்கான ஏக்கத்தைத் தொடர்ந்து வெளிப்படுத்தினர். 1927 மற்றும் 1930க்கு இடையில், ஹுவாங் டாவோ (Huang Dao) மற்றும் யே லின் (Yeh Lin) ஆகிய செய்தித்தாள் துணைப் பத்திரிகைகளின் ஆசிரியர்களும் எழுத்தாளர்களுமான ஸாங் ஜின்யான் (Zhang Jinyan) மற்றும் சென் லியான்கிங் (Chen Lianqing) ஆகியோர் முறையே இந்த அறிவுஜீவிகளைத் தங்கள் உடனடி சுற்றுப்புறங்களிலிருந்து படைப்பூக்கம் பெறவும், இரப்பர் தோட்டங்கள், வெப்பமண்டல வானிலை, தொழிலாளர்கள் மற்றும் உள்ளூர் உணவு வகைகள் போன்ற உள்ளூர் வண்ணங்களைச் சித்தரிக்கவும் அறிவுறுத்தினர். "நன்யாங்" (தெற்கு கடல்) வண்ணங்கள் என்றும் குறிப்பிடப்படும் இந்தக் கருத்தியல், முதன்மையான சீனப் பண்பாட்டிலிருந்து வேறுபட்ட ஒரு புலம்பெயர் சீன அடையாளத்தை உருவாக்கும் ஒரு தெளிவாக அறிந்த முயற்சியிலிருந்து வெளிப்பட்டது.

ஸாங் (Zhang) மற்றும் சென் (Chen) ஆகியோரின் நெருங்கிய கூட்டாளியான இட்சாங் (Tchang), இந்நெறிமுறைகளைத் தனது படைப்புகளில் மொழிபெயர்த்தார். SOCA-வின் ஆண்டுக் கண்காட்சிகளில் அவர் காட்சிப்படுத்திய 70க்கும் மேற்பட்ட கலைப்படைப்புகளில், தென்னை மரங்கள், 'அட்டாப்' கூரை வீடுகள் மற்றும் வட்டாரம் முழுவதும் உள்ள பல்வேறு சமூகங்கள் போன்ற உள்ளூர் வாழ்க்கையின் காட்சிகளைப் பல படைப்புகள் சித்தரித்தன. அவரது அணுகுமுறை சீன ஓவியர்கள் சங்கத்தில் உள்ள பல ஓவியர்களைப் பாதித்தது, அருகிலுள்ள காப்பகப் பொருள்களில் காணப்படுவது போல், உள்ளூர் இயல்புகளை அவர்களின் ஓவியங்களில் சித்தரிக்க அவர்களைத் தூண்டியது.

印妇 (இந்தியப் பெண்) 1939 கித்தானில் எண்ணெய் சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2021-00082
காவலாளி 1936 கித்தானில் எண்ணெய் ஓவியரின் மகள் சாங் சி ஃபன் (ஷெவின்) [Chang Si Fun (Shewin)] அளித்த பரிசு சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2022-00943
ஒரு சீக்கிய மனிதனின் உருவப்படம் சுமார் 1930கள் கித்தானில் எண்ணெய் செலினா ஆங்கின் (Selina Ang) திரட்டு
பெயரிடப்படாதது (அமர்ந்திருக்கும் மலாய் மனிதன்) சுமார் 1930கள் கித்தானில் எண்ணெய் 'ஹோ கா கே'வின் (Ho Kah Keh) திரட்டு
[தலைப்பிடவில்லை] (நிலைப்பொருள் ஓவியம்) சுமார் 1930கள் கித்தானில் எண்ணெய் ஓவியரின் மகள் சாங் சி ஃபன் (ஷெவின்) [Chang Si Fun (Shewin)] அவர்களின் பரிசு சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2022-00941
யூவின் உருவப்படம் சுமார் 1939–1942 கித்தானில் எண்ணெய் சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2021-00080 இவ்வோவியத்தில், இட்சாங் கடற்கரையில் இரண்டு மலாய்ச் சிறுவர்களைச் சித்தரிக்கிறார்; அவர்கள் வெறும் மார்புடன் வெள்ளைக் கைலி (சரோங்) அணிந்துள்ளனர். ஒருவரின் கை குட்டையான சிறுவனின் மீது சோர்வாகச் சுற்றப்பட்டிருக்கிறது, மேலும் இருவரும் பார்வையாளரிடமிருந்து தலையைத் திருப்பி, தூரத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

இட்சாங் பெரும்பாலும் தனது உருவப் பொருள்களை ஒரு சித்திரக் கருவியாக இணைத்து, பல படைப்புகளில் பயன்படுத்தினார். அவரது இணைத்தல் ஒரு காட்சி எதிரொளிப்பை உருவாக்கியது, இது சட்டகத்திற்குள் உள்ள இரண்டு உருவங்களுக்கு இடையிலான நுட்பமான வேறுபாடுகளையும் மாறும் பதற்றத்தையும் ஆராய அனுமதித்தது.
முதியவர் சுமார் 1930கள் கித்தானில் எண்ணெய் டாக்டர் பிரெண்டா ஆங்கின் (Dr. Brenda Ang) திரட்டு
நிர்வாணம் 1939 கித்தானில் எண்ணெய் ஓவியரின் மகள் சாங் சி ஃபன் (ஷெவின்) [Chang Si Fun (Shewin)] அவர்களின் பரிசு சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2022-00944
马达老妇 படாக் (Batak) இன மூதாட்டி 1937 கித்தானில் எண்ணெய் சிங்கப்பூர் தேசிய கலைக்கூடத்தின் திரட்டு 2024-00333 இட்சாங் வரைந்த, இந்த வயதான படாக் (Batak) பெண்ணின் (இந்தோனேசியாவின் சுமத்ராவில் உள்ள டோபா (Toba) ஏரிப் பகுதியைச் சேர்ந்தவராக இருக்கலாம்) உருவப்படம், அவரது வறண்ட சருமத்தையும் எலும்புக்கூட்டையும் படம்பிடித்து, நெகிழ்ச்சியூட்டுவதாக உள்ளது. வெறும் மார்பகங்களுடன், அவள் நம் பார்வையை ஒரு தெளிவான சமநிலையுடன் வைத்திருக்கிறாள். தலையணி, உடை, அவள் அமர்ந்திருக்கும் மெத்தையின் உள்ளூர்த் துணிவகை மற்றும் காட்டுப்பன்றி ('படாக்' மக்களுடன் தொடர்புடைய ஒரு விலங்கு) பற்றிய விவரங்கள் காட்சியை விவரமாக வெளிப்படுத்துகின்றன மற்றும் மலைப்பகுதிச் சூழலைக் காட்டுகின்றன. 1930களின் பிற்பகுதியில், இட்சாங் சுமத்ராவிற்கு ஒரு பயணம் மேற்கொண்டார், இன்றுவரை, அவரது சுமத்ரா பயணத்திலிருந்து எஞ்சியிருக்கும் ஒரே அறியப்பட்ட படைப்பு இதுதான்.

“仅凭悠悠遐想，已或许捉住了一刹那现实的人生味，苦闷与厌倦，亦从而消逝。”

“வெறும் கற்பனையால் மட்டும், ஒருவர் வாழ்க்கையின் அனுபவங்களை, ஒரு கணத்தில் படம்பிடித்திருக்கலாம், இதனால் கசப்பும் சோர்வும் நீங்கும்.”

கருத்துப்படங்கள் (cartoons) *வரையும் வாழ்க்கை*

அச்சு ஊடகங்களில் பரவலாகப் பரப்பப்பட்ட ‘மன்ஹுவா’ கருத்துப்படங்கள் அன்றைய சமூக மற்றும் அரசியல் சிக்கல்களில் பொதுமக்களை ஈடுபடுத்த கசப்பான நகைச்சுவை மற்றும் துணிச்சலான படங்களைப் பயன்படுத்தின. சிங்கப்பூரின் முதல் படத் துணை இதழான சின் குவாங் (Sin Kwang) மற்றும் பின்னர் வெளிவந்த யே ஹுய் ஆகியவற்றின் திறமையான கருத்துப்பட வரைநர் (cartoonist) மற்றும் ஆசிரியராக, இட்சாங் ஜு சி (Tchang Ju Chi) தனது கருத்துப் படங்கள் மூலம் கூர்மையான சமூக-அரசியல் திறனாய்வுரையை வழங்கினார். வரலாற்றுச் செய்தித்தாள்களின் மின்னிலக்கப் படிகளிலிருந்து மீட்டெடுக்கப்பட்டு, கண்காட்சிக்காக இங்கே மறுபதிப்பு செய்யப்பட்ட அவரது படைப்புகள், வெகுமக்களின் பசி முதல் இளைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் புலம்பெயர்ந்தோரின் அரசியல் அக்கறையின்மை வரை பல்வேறு கருப்பொருள்களை ஆராய்ந்தன. இந்த வளர்ந்து வரும் காட்சி ஊடகத்திற்குப் பங்களிக்க யே கியான்யு (Ye Qianyu) போன்ற முன்னணி சீன ஓவியர்களையும் அவர் அழைத்து வந்தார்.

இரண்டாம் சீன-ஜப்பானியப் போர் (1937–1945) வெடித்தவுடன், கருத்துப்படங்களும் மரச்சிற்பங்களும் சமூக அணிதிரட்டலுக்கான கருவிகளாக மாறின. "பாருங்கள்! நமது தோழர்களுக்கு எதிரான ஜப்பானியர்களின் வன்முறையை" போன்ற இட்சாங்கின் படைப்புகளில், போர்க்கால வன்முறைச்செயல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி திரட்டுவதற்காக, தேசப் பாதுகாப்புக் கருத்துப்படக் கண்காட்சி (National Salvation Cartoon Exhibition) (1937) உள்ளிட்ட கண்காட்சிகளை ஏற்பாடு செய்வதிலும் அவர் முன்னணிப் பங்காற்றினார்.

苦闷 (குழப்பம்) யே ஹுய் (*Yeh Hui*), லாட் பாவ் (Lat Pau), நவம்பர் 1, 1930
青黄不接的过渡时期。 年轻的朋友呀! 我们正是冲波逆流的孤舟, 汝不努力地撑起竿儿么! 匪特不会前进! 顷刻便至下游! (ஓர் ஆழ்கடலில் இடைக்காலத்தில் பயணிக்கும்போது, இளம் நண்பர்களே! நாம் அலைக்கு எதிரான ஒரு தனிப் படகு மட்டுமே, உங்கள் முழு பலத்தையும் பயன்படுத்தி படகோட்ட மாட்டீர்களா? இல்லையெனில், நீங்கள் போக முடியாததோடு மட்டுமல்லாமல், ஒரு நொடியில் நீங்கள் ஆழத்துக்கு அடித்துச் செல்லப்படுவீர்கள்!) சின் குவாங் (*Sin Kwang*), சின் செவ் ஜிட் போ (*Sin Chew Jit Poh*), செப்டம்பர் 9, 1929
中国青年的能力就有限。推上这么多东西。更不能翻身了。 (சீன இளைஞர்களின் திறன்கள் குறைவாகவே உள்ளன. இவ்வளவு சுமைகளை அவர்களின் தோளில் சுமத்துவது அவர்களின் வளமான எதிர்காலத்தை மீட்டெடுப்பதை இன்னும் கடினமாக்குகிறது.) கருத்துப்படத்தினுள் உள்ள வார்த்தைகள், மேலிருந்து கடிகாரத் திசையில்: “礼教; 政治; 经济; 家庭; 恋爱” [கன்பூசிய நெறிமுறைகள்; அரசியல்]; [பொருளாதாரம்; குடும்பம்; காதல்] சின் குவாங் (*Sin Kwang*), சின் செவ் ஜிட் போ (*Sin Chew Jit Poh*), அக்டோபர் 28, 1929
கருத்துப்படத்தினுள் உள்ள வார்த்தைகள்: “革命大道” [புரட்சியின் பாதை] 非清洗一下不行 (தூய்மைப்படுத்தப்பட வேண்டும்) சின் குவாங் (*Sin Kwang*), சின் செவ் ஜிட் போ (*Sin Chew Jit Poh*), டிசம்பர் 9, 1929
கருத்துப்படத்தினுள் உள்ள வார்த்தைகள்: “中国青年的文明” [சீன இளைஞர்களின் நாகரிகம்] சின் குவாங் (*Sin Kwang*), சின் செவ் ஜிட் போ (*Sin Chew Jit Poh*), நவம்பர் 11, 1929

南洋革命家 (நன்யாங்கின் புரட்சியாளர்கள்) Words within the cartoon: “革命” [கருத்துப்படத்தினுள் உள்ள வார்த்தைகள்: புரட்சி] சின் குவாங் (*Sin Kwang*), சின் செவ் ஜிட் போ (*Sin Chew Jit Poh*), ஜனவரி 13, 1930
南洋侨胞都要各配一个 (நன்யாங்கில் உள்ள ஒவ்வொரு வெளிநாட்டுச் சீனர்களுக்கும் ஒன்றைப் பரிந்துரைக்க வேண்டும்) கருத்துப்படத்தினுள் உள்ள வார்த்தைகள்: “三千度的近视。” [3000 டிகிரி கிட்டப்பார்வை] சின் குவாங் (*Sin Kwang*), சின் செவ் ஜிட் போ (*Sin Chew Jit Poh*), டிசம்பர் 16, 1929
捉迷藏 (ஒளிதலும் தேடுதலும்) கருத்துப்படத்தினுள் உள்ள வார்த்தைகள், மேலிருந்து கடிகாரத் திசையில்: “政治; 华侨” [அரசியல்; சீனக் குடியேறிகள்] சின் குவாங் (*Sin Kwang*), சின் செவ் ஜிட் போ (*Sin Chew Jit Poh*), அக்டோபர் 28, 1929
கருத்துப்படத்தினுள் உள்ள வார்த்தைகள்: “这是真的” [இஃது உண்மை] சின் குவாங் (*Sin Kwang*), சின் செவ் ஜிட் போ (*Sin Chew Jit Poh*), நவம்பர் 18, 1929
金钱紧迫下的市民 (பணத்தின் அடக்குமுறையின் கீழ் எளிய மக்கள்) யே ஹுய் (*Yeh Hui*), லாட் பாவ் (*Lat Pau*), டிசம்பர் 20, 1930
腰裹有几块臭铜板便作威作福起来。 (துர்நாற்றம் வீசும் சில செப்பு நாணயங்களுடன், அவர் திமிர்பிடித்தவராகவும் ஆதிக்கம் செலுத்துபவராகவும் ஆனார்) கருத்துப்படத்தினுள் உள்ள வார்த்தைகள்: “峇味快！ 快！ 快些！ ” [பா வெய் (Ba Wei), விரைவாக! விரைவாக! இன்னும் விரைவாக!] ஃபேன் இக்ஷிங் (*Fan Xing*) , சின் சியூ ஜிட் போ (*Sin Chew Jit Poh*), ஏப்ரல் 21, 1930
安得不瘦藏 (ஒருவர் எப்படி ஒல்லியாக இருக்க முடியாது) சின் குவாங் (*Sin Kwang*), சின் செவ் ஜிட் போ (*Sin Chew Jit Poh*), நவம்பர் 25, 1929

கருத்துப்படத்துக்குள் உள்ள வார்த்தைகள், இடமிருந்து வலமாக: "卢沟桥"; "正义"; "公理" [மார்கோ போலோ (Marco Polo) பாலம்; நீதி; ஆக்கியம்] நன்யாங் சியாங் பாவ் (*Nanyang Siang Pau*), ஜூலை 10, 1937
கருத்துப்படத்துக்குள் உள்ள வார்த்தைகள்: "倡言和平的人拼命把地球装满炸药" [அமைதியை ஆதரிப்பவர்கள் புவியை வெடிபொருள்களால் நிரப்ப ஆவலுடன் முயற்சி செய்கிறார்கள்.] சின் குவாங் (*Sin Kwang*), சின் செவ் ஜிட் போ (*Sin Chew Jit Poh*), நவம்பர் 18, 1929
看吧！暴日下的同胞 (பாருங்கள்! நமது சக நாட்டு மக்களுக்கு எதிரான ஜப்பானியர்களின் வன்முறையை!) நன்யாங் சியாங் பாவ் (*Nanyang Siang Pau*), ஜனவரி 1, 1938